# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8069884

C

1. District : VELLORE | PS: VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE | Year: 2020 | FIR No. 7/2020 | Date 14.10.2020.
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF CORRUPTION ACT — Sections பிரிவுகள்: 7 OF P.C Act 1988 as amended by the P.C (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் — | Date to : நாள் வரை 13.10.2020 Prior
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை to 18.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.2020 | Time : நேரம் 18.00 hrs &
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.10.2020 VOLUME - II 2020. | Time : நேரம் 09.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — WRITTEN COMPLAINT

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — NORTHEAST DIRECTION, 7 KMS.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி TN POLLUTION CONTROL BOARD, VELLORE ZONE, VELLORE, CAR No. TN 25 BQ 3958 AND DR. No. 22A, 1st MAIN ROAD, MUNICIPAL COLONY, GANDHI NGR, KATPADI, VELLORE.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54/2020 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Dy. Inspection Cell Officer. | (g) Address : முகவரி Office of the District Inspection Cell Officer, Collectorate, Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. M. PANNIR SELVAM (57/2020) S/o VENKATESAN, JOINT CHIEF ENVIRONMENT ENGINEER, TNPCB, VELLORE ZONE, VELLORE

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

"No DELAY"

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 14.10.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.00hrs.

Name: பெயர் S. VIJAY,
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண்
VIGILANCE & ANTI-CORRUPTION,
VELLORE.

**SUBMITTED:**

இன்று 14.10.2020-ஆம் தேதி 09.15 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 14.10.2020 அனுப்புநர் S.ஜோதி, மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், பொருள்: திடீர் ஆய்வு சோதனை – வேலூர் மாவட்டம் வேலூர் காட்பாடியில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தை தொடர்ந்து Regn.No. TN 25 BD 3958 Toyota Etios கார் மற்றும் எண்.22A, முதல் மெயின் ரோடு, முனிசிபல் காலனி, காந்தி நகர், காட்பாடி, வேலூர்-6 என்கிற முகவரியில் 13.10.2020 அன்று இருதுறை திடீர் சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. **** நான் ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். நேற்று 13.10.2020-ஆம் தேதியன்று மாலை 18.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது, வேலூர் மாவட்டம், வேலூர் காட்பாடி காந்தி நகர் அக்சீலியம் கல்லூரி சாலையில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் 13.10.2020 ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு மாசுக்காட்டுப்பாட்டு வாரிய Zonal Level Consent Clearance Committee meeting மற்றும் மதியம் 13.00 மணிக்கு Zonal Level Review meeting நடைபெற்றதாகவும் அதில் வேலூர், வாணியம்பாடி, ஒசூர், தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டதாகவும், மேலும், தனியார் தொழிற்சாலைகளின் ஆலோசகர்கள் (Consultants) மற்றும் இடைத்தரகர்கள் மூலம் தனியார் தொழிற்சாலைகளில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு சம்மந்தமான கோப்புகளுக்கு இசைவு வழங்க இலஞ்சமாக லட்சக்கணக்கில் பணம் வாங்கிக்கொண்டு, வேலூர் மண்டல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய இணை தலைமை பொறியாளர் திரு.பன்னீர்செல்வம் அவர்கள் தமிழ்நாடு அரசு என்று ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட வெள்ளை நிற Toyota Etios பதிவு எண்.TN 25 BD 3958 என்ற காரில் புறப்பட்டு, அவர் தனியாக அலுவலகம் நடத்தி வரும் எண்.22A, முதல் மெயின்

ரோடு, முனிசிபல் காலனி, காந்தி நகர், காட்பாடி, வேலூர்-6 என்கிற முகவரிக்கு செல்ல உள்ளதாக வந்த நம்பகமான தகவலின் பேரில், நான் எனது நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு தெரியப்படுத்திய பின் 13.10.2020-ஆம்தேதி 18.30 மணியளவில் நானும், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் மற்றும் குழுவினருடன், மேற்படி காட்பாடி காந்தி நகர் அக்சீலியம் காலேஜ் ரோடில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வேலூர் மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள சென்றபோது, அவ்வலுவலகத்தில் இருந்து தமிழ்நாடு அரசு என்று ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட வெள்ளை நிற Toyota Etios (Regn.No. TN 25 BD 3958) காரானது வெளியில் புறப்பட்டு வந்தது. மேற்படி காரை அரசு வாகனத்தில் இருதுறை திடீர் சோதனைக்குழுவினராகிய நாங்கள் தொடர்ந்து சென்றபோது, மேற்படி காரானது எண்.22A, முதல் மெயின் ரோடு, முனிசிபல் காலனி, காந்தி நகர், காட்பாடி, வேலூர்-6 என்கிற முகவரி உள்ள வீட்டின் முன்பு சற்று தொலைவில் நின்றது. மேற்படி காரை நானும், காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் மற்றும் இரு துறை திடீர்சோதனைக்குழுவினர் இடைநிறுத்தி அணுகியபோது அந்த காரில் ஓட்டுனர் திரு.விஜயக்குமார் என்பவரும், அவருக்கு இடப்புறமுள்ள முன் இருக்கையில் வேலூர் மண்டல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய இணை தலைமை பொறியாளர் திரு.பன்னீர்செல்வம் உட்கார்ந்திருந்தனர். அவர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினராகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, எங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பித்தோம். பின்னர், நான் மேற்படி காரில் வந்த திரு.பன்னீர்செல்வம் அவர்களை சோதனையிட அவரது சட்டையின் மேல் இடப்புற வெளிப்பாக்கெட்டில் பணம் ரூ.1,400/- இருந்தது. அவரிடம் அது குறித்து விசாரணை செய்ய, அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் என்று சொன்னார். எனவே, அந்த பணம் அவரிடம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. ஓட்டுனர் திரு.V.விஜயக்குமார் என்பவரை சோதனை செய்ய, அவரது பின் பக்க வலப்புற பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.3,500/- இருந்தது. அந்த பணத்தை பற்றி விசாரிக்க, அவர் அது தன்னுடைய சொந்த பணம் என்று சொன்னதால், அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், காரை சோதனை செய்ய, மேற்படி காரின் பின் இருக்கையில் Blue colour rexin bag இருந்தது. திரு.பன்னீர்செல்வம் அவர்கள் அந்த Blue colour rexin bag தன்னுடையதுதான் என்று சொன்னார். அதை சோதனை செய்ய, அதில் கட்டு கட்டாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.2,50,000/- இருந்தது. மேலும், அந்த Blue colour rexin bag-ஐ சோதனை செய்ய, அதில் மாசுக்கட்டுப்பாடு அலுவலகம் சம்மந்தப்பட்ட பேப்பர்கள் இருந்தன. மேலும், அந்த காரை சோதனையிட, காரின் பின்னிருக்கையில் சீல் பிரிக்காத Brandy பாட்டில் மற்றும் WHISKY பாட்டில் தலா ஒன்று இருந்தன.

அவை வழக்கு சம்மந்தமாக கைப்பற்றப்படவில்லை. திரு.பன்னீர்செல்வம் அவர்களிடம் மேற்படி பணம் ரூ.2,50,000/- குறித்து கேட்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, மேற்படி தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.2,50,000/- வழக்கு சம்மந்தமாக கைப்பற்றப்பட்டது. மேலும், வேறு பணம் ஏதாவது வைத்துள்ளீர்களா என்று அவரிடம் கேட்க, தான் எண்.22A, முதல் மெயின் ரோடு, முனிசிபல் காலனி, காந்தி நகர், காட்பாடி, வேலூர்-6 என்கிற முகவரியில் உள்ள வீட்டின் முதல் தளத்தில் உள்ள தன்னுடைய தனி அலுவலகத்தில் பணம் உள்ளதாக சொன்னார். அவர் எங்களை அந்த தனி அலுவலகத்திற்கு அழைத்து சென்று, கதவை திறந்து அந்த அலுவலகத்தின் ஹாலில் உள்ள ஸ்டீல் மேஜையில் உள்ள மேல் இழுவறையையும், அதற்கு கீழே உள்ள அறையையும் திறந்து காண்பித்தார். அவற்றில் கட்டு கட்டாக மற்றும் கத்தை கத்தையாக 500 மற்றும் 2000 ரூபாய் நோட்டுகள் இருந்தன. அந்த பணம் குறித்து, திரு.பன்னீர்செல்வம் அவர்களிடம் விசாரிக்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேலும், அவரிடம் மொத்தம் எவ்வளவு ரூபாய் உள்ளது என்று கேட்க, அவரால் எந்த பதிலும் கூற இயலவில்லை. அந்த பணத்தை எண்ணிப் பார்க்க, ரூ.31,23,000/- இருந்தது. அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலாத காரணத்தினால் அந்த பணம் ரூ.31,23,000/- வழக்கு சம்மந்தமாக கைப்பற்றப்பட்டது. மேற்படி எண்.22A, முதல் மெயின் ரோடு, முனிசிபல் காலனி, காந்தி நகர், காட்பாடி, வேலூர்-6 என்கிற முகவரியில் உள்ள ஒரு அறையின் கட்டிலின் அருகில், தரையில் மூன்று HOBSONS XR Pure French Grape Brandy (750 ml) சீல் பிரிக்காத பாட்டில்கள் இருந்தன. மேற்படி தனி அலுவலகத்தின் ஹாலில் உள்ள மேஜையின் மேல் அலுவலக சம்மந்தப்பட்ட i) TAMILNADU POLLUTION CONTROL BOARD Abstract B.P.No.56, dt:09.10.2019 (8 sheets) Xerox copy, ii) TAMILNADU POLLUTION CONTROL BOARD Abstract B.P.No.26, dt:30.07.2018 (6 sheets) Xerox copy, iii) PUBLIC WORKS DEPARTMENT G.O.Ms.No.1742, dt:19.9.1979 (3 sheets) Xerox copy, iv) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் திருவண்ணாமலை மாவட்டம் ஜூலை – 2020 மாவட்ட அளவிலான இசைவாணை வழங்கும் குழுவன் தீர்மானம் தேதி:17.07.2020 (3 sheets) Xerox copy, v) O/o JCEE(M), TNPC BOARD VELLORE ZONE AGENDA FOR THE 76th ZLCCC MEETING, dt:11.09.2020 (1 sheets) Xerox copy, vi) AMBUR TANNERY EFFLUENT TREATMENT CO.LTD. 010727, 17th June 2020 (1 sheet) Xerox copy, vii) மாவட்ட அளவிலான இசைவாணை வழங்கும் குழுவின் தீர்மானம் - செப்டம்பர் 2020 (2 sheets) Xerox copy, viii) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழுப்புரம் செப்டம்பர் – 2020 (1 sheet) Xerox copy, ix) இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (க), அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வேலூர் மண்டலம் 77வது மண்டல அளவிலான இசைவாணை வழங்கும் குழுவின் அஜெண்டா, தேதி:13.10.2020 (1 sheet) Xerox copy, x) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு

மாசு கட்டுப்பாடு வாரியம் திருவண்ணாமலை செப்டம்பர் – 2020 மாவட்ட அளவிலான இசைவாணை வழங்கும் குழுவின் தீர்மானம் தேதி.22.09.2020 (1 sheet) Xerox copy மற்றும் xi) TAMILNADU POLLUTION CONTROL BOARD O/o JCEE/TNPCB/VELLORE ZLCCC-ITEM NO.ZLCCC-VLR-77-01, dt:13.10.2020 அதில் DEE Vellore, DEE Vaniyambadi, DEE Villupuram, DEE Hosur, DEE Dharmapuri, DEE Thiruvannamalai மற்றும் JCEE(M)VLR ஆகியோர் கையொப்பம் செய்த அசல் ஆவணம் (11 தாள்கள்) ஆகிய அலுவலக சம்மமந்தப்பட்ட ஆவணங்கள் இருந்தன. அவற்றை பார்வை செய்து வழக்கு நிமிர்த்தமாக கைப்பற்றப்பட்டன. மேலும், திரு.G.ரவிச்சந்திரன் த/பெ குருசாமி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், வேலூர் என்பவர் ஆஜர் செய்த வேலூர் மண்டல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவலக வருகைப்பதிவேடும் வழக்கு நிமிர்த்தமாக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரு.33,73,000/-, 11 ஆவணங்கள் மற்றும் ஒரு வருகைப்பதிவேடும் வழக்கு நிமிர்த்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 13.10.2020-ஆம் தேதி இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர்சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், திரு.G.ரவிச்சந்திரன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், காட்பாடி, வேலூர், திரு.M. பன்னீர் செல்வம், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், வேலூர் மண்டலம், வேலூர் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திரு.M. பன்னீர் செல்வம், இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், வேலூர் மண்டலம், வேலூர் அவர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. மாசுக்காட்டுப்பாட்டு வாரிய Zonal Level Consent Clearance Committee meeting மற்றும் Zonal Level Review meeting-ல் வேலூர், வாணியம்பாடி, ஒசூர், தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள தனியார் தொழிற்சாலைகளின் ஆலோசகர்கள் (Consultants), இடைத்தரகர்கள் மூலமாகவும் மற்றும் தனியார் தொழிற்சாலைகளின் சம்மந்தப்பட்ட நபர்கள் மூலமாகவும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் கோப்புகளுக்கு இசைவாணை (consent) வழங்கவும், தன்னுடைய சட்டரீதியான அலுவலக பணியை மேற்கொள்ளவும், தனியாருக்கு சொந்தமான வீட்டினை வாடகைக்கு எடுத்து தனி அலுவலகம் நடத்தி வந்த திரு.M. பன்னீர் செல்வம் (57/2020), த/பெ வெங்கடேசன், மண்டல இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், வேலூர் மண்டலம், காந்தி நகர், காட்பாடி, வேலூர்-6 என்பவர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் மற்றும் கணக்கு கூற இயலாத பணம்

ரு.33,73,000/-, பதினொரு ஆவணங்கள் மற்றும் வேலூர் மண்டல தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவலக வருகைப்பதிவேடு ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxxxxxx (S.ஜோதி) 14/10/2020 மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், ஒருங்கிணைந்த வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received the complaint on 14.10.2020 at 09.00 hrs, Inspector Tr.S.Vijay to receive the complaint and register a case Sd/- xxxxxxxxxxx (K.S.HEMACHITHRA) 14.10.2020, DSP/VAC/Vellore.

Madam, received the complaint and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.07/2020, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 14.10.2020 at 09.30 hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned. Sd/- xxxxxxxxxxx (S.VIJAY) 14.10.2020, Ins/VAC/Vellore.

(S.VIJAY) 14/X/2020
Ins/VAC/Vlr